செய்தி வெளியீடு எண்:357 நாள் : 20.07.2015

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் 5 ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி, சட்டப் பட்டப்படிப்பிற்கான கலந்தாய்வை துவக்கி வைத்து, மாணவர்களுக்கு சேர்க்கை ஆணை வழங்கினார்**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இன்று (20.7.2015) நடைபெற்ற அரசு சட்டக் கல்லூரிகளுக்கான 5 ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி. சட்டப் பட்டப்படிப்பிற்கான கலந்தாய்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்து மாணவர்களுக்கு சேர்க்கை ஆணை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பின்வருமாறு உரையாற்றினார்: தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் பேராசிரியர் வணங்காமுடி, சட்டத்துறை அரசுச் செயலாளர் (பொறுப்பு) திரு பூவலிங்கம், சட்டக்கல்வி இயக்குநர் முனைவர் பேராசிரியர் சந்தோஷ்குமார், சட்டப்படிப்பு சேர்க்கைக் குழுவின் தலைவர், மற்றும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பொறுப்பு வகிக்கும், முனைவர் பேராசிரியர் சவுந்திர பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். இந் நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பின்வருமாறு உரையாற்றினார்:

சிறப்பு வாய்ந்த தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற, அரசு சட்டக் கல்லூரிகளில், 5 ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி. சட்டப் பட்டப்படிப்பிற்கான, கலந்தாய்வு துவக்க விழாவில் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு சேர்க்கை ஆணை வழங்கும் நல்வாய்ப்பினை வழங்கிய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், முனைவர் பேராசிரியர் வணங்காமுடி அவர்களே !

சட்டத்துறை அரசுச் செயலாளர் பொறுப்பு வகிக்கும், திரு பூவலிங்கம் அவர்களே !

சட்டக்கல்வி இயக்குநர், முனைவர் பேராசிரியர் சந்தோஷ்குமார் அவர்களே !

சட்டப்படிப்பு சேர்க்கைக் குழுவின் தலைவர், மற்றும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பொறுப்பு வகிக்கும், முனைவர் பேராசிரியர் சவுந்திர பாண்டியன் அவர்களே !

அரசு சட்டக் கல்லூரிகளின் முதல்வர் மற்றும் பேராசிரியர்களே !

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களே !

பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களே,

இந்த கலந்தாய்வில் கலந்து கொள்ள வருகை புரிந்துள்ள மாணவ, மாணவியர்களே ! மற்றும் அவர்களுடன் துணையாக வந்துள்ள பெற்றோர் மற்றும் உறவினர்களே !

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழகம் அனைத்துத் துறைகளிலும், அகில இந்திய அளவில், முதன்மை மாநிலமாகச் சிறந்து விளங்குகிறது. ஏழை, எளிய மக்களின் நலன் கருதி, பல்வேறு நலத் திட்டங்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செயல்படுத்தி வருகிறார்கள்.

ஏழை எளிய மக்கள் அனைவருக்கும், நீதி விரைவில் கிடைக்க வேண்டும், என்ற உயரிய நோக்கத்துடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஜனநாயகத்தின் தூண்களுள், முக்கியத் தூணாக விளங்கிக் கொண்டிருக்கும் நீதித்துறை, நிலுவையில் உள்ள வழக்குகளை, விரைந்து முடிக்கும் வகையில், புதிய நீதிமன்றங்களையும், நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்கு தேவையான குடியிருப்பு வசதிகளையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்துடன் ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், நான்கு ஆண்டுகளில், நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும், 375 கோடி ரூபாய் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2014–15ஆம் நிதியாண்டில் மட்டும், புதிய நிதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க, 168 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மிகவும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள் சங்கத்தினர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களை நேரில் சந்தித்து, வழக்கறிஞர்கள் நல நிதியை, 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும், என கேட்டுக் கொண்டனர். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், வழக்கறிஞர்கள் கேட்டதை விட அதிகமாக, அதாவது, 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இவ்வாறு வழக்கறிஞர்களின் நலனில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ, மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்க, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா மடிக்கணினி, விலையில்லா பாடப்புத்தகங்கள், ஜாமெண்டரி பாக்ஸ் போன்றவற்றை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் சட்டக் கல்வியை மேம்படுத்தும் பொருட்டு, பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள்.

சட்டக் கல்வியை சர்வதேச அளவில் உயர்த்திட, தேசிய அளவிலான கல்வி நிலையம் ஒன்றினை, தமிழ்நாட்டில் அமைத்திடும் பொருட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியை அமைத்திட, 25 ஏக்கர் நிலமும், 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

விரைந்து கட்டி முடிக்கப்பட்ட, தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால், 22.8.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டு, ஐந்தாண்டு பி.ஏ.,எல்.எல்.பி. (ஹானர்ஸ்) மற்றும் பி.காம்.,எல்.எல்.பி. (ஹானர்ஸ்) சட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்தியாவில் சட்டக் கல்விக்கென முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இப்பல்கலைக்கழகத்தில் சீர்மிகு சிறப்பு சட்டப் பள்ளி (School of Excellence in Law) ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த சீர்மிகு சிறப்பு சட்டப் பள்ளியில் 5 ஆண்டு பி.ஏ,.எல்.எல்.பி. (உறானர்ஸ், பி.காம்.எல்.எல்.பி.(உறானர்ஸ்) மற்றும் 3 ஆண்டு எல்.எல்.பி. (உறானர்ஸ்) பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு முதல் 5 ஆண்டு

பி.பி.ஏ.எல்.எல்.பி.(உறானர்ஸ்) மற்றும் பி.சி.ஏ.எல்.எல்.பி .(உறானர்ஸ்) பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேலும் முதுகலை சட்ட மேற்படிப்புத் துறைகளின் மூலம் 8 பிரிவுகளில் முதுநிலை எம்.எல். சட்ட மேற்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுவதுடன், ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தொலைதூரக் கல்வி வாயிலாக சட்டம் சார்ந்த 11 முதுநிலை பட்டய படிப்புகள் மற்றும் 1 சான்றிதழ் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு, பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில், 15 ஏக்கர் நிலத்தில், பெருவளாகம் கட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 59 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளன. இந்த புதிய வளாகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் விரைவில் துவக்கி வைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற 7 அரசு சட்டக் கல்லூரிகள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் செயல்பட்டுவரும் அரசு சட்டக் கல்லூரிகளில் 3 ஆண்டு எல்.எல்.பி. சட்ட பட்டப்படிப்பும் மற்றும் வேலூர் தவிர்த்து உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் 5 ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி. சட்ட பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் 5 ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி. பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு இன்று

தொடங்கி 4 நாட்கள் நடைபெறவுள்ளது. மொத்தமுள்ள 1,052 இடத்திற்கு 5,551 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் நிராகரிக்கப்பட்ட 186 விண்ணப்பங்கள் தவிர்த்து, 5,325 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

சட்டப்படிப்பு படிக்க விண்ணப்பித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து வருவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சட்டக்கல்வி சிறப்பான வளர்ச்சியை அடைந்து வருவதை உலகிற்கு பறை சாற்றுகிறது.

- இங்கு வெளியிடப்பட்டுள்ள தர வரிசைப் பட்டியலில், பொதுப்பட்டியலின் கட்ஆப் 89.875 மதிப்பெண் என்பது மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. இது சட்டம் படிக்க விரும்பும் மாணவர்களின் சேர்க்கைத் தரம் உயர்ந்துள்ளது என்பதை காட்டுகிறது.

- சட்டக் கல்வி பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களின் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

- இந்த கலந்தாய்வில் கலந்துகொண்டு, சேர்க்கை ஆணை பெற்ற மற்றும் பெறவுள்ள, மாணவ, மாணவியர்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

- நீங்கள் அனைவரும் நன்றாகப் படித்து, சிறந்த நீதிபதிகளாகவும், வழக்கறிஞர்களாகவும், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளாகவும் விளங்கி, வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என உங்களை எல்லாம், அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

- சிறப்பு வாய்ந்த இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நல்வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி, வணக்கம்.**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**